

**தலைவர் ஹென்றி பி. ஐரிங்**
பிரதான தலைமையில்
முதலாம் ஆலோசகர்

# சாட்சியும் மனமாற்றமும்

சத்தியம் குறித்த சாட்சி பெறுவதற்கும், உண்மையாகவே மனமாறுவதற்கும் இடையே ஒரு வேறுபாடு இருக்கிறது. உதாரணமாக மாபெரும் அப்போஸ்தலனாகிய பேதுரு, இயேசுவே தேவ குமாரன் என தான் அறிவதாக, இரட்சகரிடம் சாட்சி கொடுத்தான்.

“அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்.

“சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.

“இயேசு அவனை நோக்கி யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்” (மத்தேயு 16:15–17).

எனினும் பின்னர் பேதுருவுக்கு அவரது கட்டளையில், கர்த்தர் அவனுக்கும் நமக்கும் உண்மையாகவே மனம் மாறவும், வாழ்நாள் முழுவதும் அந்த மனமாற்றத்தை நீட்டிக்கவும் ஒரு வழிகாட்டுதல் கொடுத்தார். இயேசு இவ்விதமாக சொன்னார்:“நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரைக் குணப்படுத்து” (லூக்கா 22:32).

இயேசு கிறிஸ்துவின் உண்மையான மனம் மாறிய சீஷர்களாக சிந்திக்கவும், உணரவும், செயல்படவும் சாத்தியப்பட, சாட்சி பெறுவதைக் காட்டிலும் செய்யக்கூடிய பெரிய மாற்றம் இருப்பதாக இயேசு பேதுருவுக்குப் போதித்தார். அதுவே நாம் அனைவரும் நாடக்கூடிய பலத்த மாற்றம். அதை நாம் பெற்ற பிறகு, நமது உலக சோதனைக்காலம் முடியும்வரை நமக்கு அந்த மாற்றம் தேவை (ஆல்மா 5:13–14 பார்க்கவும்).

நமது சொந்த அனுபவத்திலிருந்தும், பிறரைக் கவனித்ததிலிருந்தும், ஆவிக்குரிய வல்லமையின் சில தருணங்கள் போதாது என அறிகிறோம். இயேசுவே கிறிஸ்து என ஆவியானவரிடமிருந்து சாட்சி பெற்ற பின்பும், தான் இரட்சகரை அறியவில்லை என பேதுரு மறுதலித்தான். மார்மன் புத்தகத்தின் மூன்று சாட்சிகள், மார்மன் புத்தகம் தேவ வார்த்தை என நேரடியான சாட்சி பெற்ற போதும், பின்னர் கர்த்தருடைய சபையின் தீர்க்கதரிசி என ஜோசப் ஸ்மித்தை ஆதரிக்கும் சாத்தியமிருந்தும் தவறினர்.

ஆல்மாவின் புத்தகத்தில் விவரிக்கப்பட்டபடி, நமது இருதயங்களில் மாற்றம் தேவை: “அவர்களும் அதே காரியங்களை ஜனங்களுக்கு அறிவித்தார்கள். அவர்களுடைய இருதயங்கள் மாற்றம் பெற்றன; பொல்லாப்பை இனியும் செய்ய வாஞ்சை இராதவர்களாயிருந்தார்கள்” (ஆல்மா 19:33; மற்றும் மோசியா 5:2ம் பார்க்கவும்).

நாம் அவரது சுவிஷேசத்துக்கு உண்மையாகவே மனமாற்றம் அடையும்போது, நமது இருதயங்கள் சுயநல அக்கறைகளிலிருந்து திரும்பி, பிறர் நித்திய ஜீவனை நோக்கி மேல்நோக்கி நகரும்போது, அவர்களை முன்னேற்ற சேவை செய்ய திருப்பப்படும் என கர்த்தர் நமக்குப் போதித்தார். அந்த மனமாற்றத்தைப் பெற இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியால் சாத்தியமாக்கப்பட்ட புது சிருஷ்டிகளாக நாம் ஜெபித்து முயலலாம்.

சுயநலத்திலிருந்து மனந்திரும்ப விசுவாசத்துக்காகவும் நம்மை விட பிறரை அதிகம் கவனிக்கும் வரத்துக்காகவும் ஜெபித்துத் தொடங்கலாம். பெருமையையும் பொறாமையையும் ஒதுக்கிவைக்க வல்லமைக்காக ஜெபிக்கலாம்.

தேவ வார்த்தை மீது அன்பு மற்றும் கிறிஸ்து மீது அன்பு ஆகிய வரத்தைப் பெறவும் ஜெபம் முக்கியமானதாக இருக்கும் (மரோனி 7:47–48 பார்க்கவும்). இரண்டும் இணைந்து வருகின்றன. தேவ வார்த்தையை நாம் வாசித்து, தியானித்து, ஜெபிக்கும்போது, நாம் அதை நேசிப்போம். கர்த்தர் அதை நமது இருதயங்களில் வைக்கிறார். நாம் அந்த அன்பை உணரும்போது, நாம் அதிகம் அதிகமாக கர்த்தரை நேசிக்கத் தொடங்குவோம். நமது பாதையில் தேவன் வைக்கிறவர்களைப் பலப்படுத்த நமக்குத் தேவையான அன்பு அதனுடன் வரும்.

உதாரணமாக, தன் ஊழியக்காரர்கள் போதிக்க கர்த்தர் விரும்புபவர்களை அடையாளம் காண நாம் ஜெபிக்கலாம். எதைப் போதிப்பது, எதைப் பற்றி சாட்சி கொடுப்பது என ஆவியானவரிடமிருந்து அறிய முழுநேர ஊழியக்காரர்கள் விசுவாசத்தோடு ஜெபிக்கலாம். அவர்கள் தாங்கள் சந்திக்கிற ஒவ்வொருவரும் அவருடைய அன்பை கர்த்தர் உணரச் செய்யும்படி விசுவாசத்துடன் ஜெபிக்கலாம். தாங்கள் சந்திக்கிற ஒவ்வொருவரையும் ஞானஸ்நானத் தண்ணீருக்கும் பரிசுத்த ஆவியானவரின் வரத்துக்கும் கொண்டு வரமாட்டார்கள். ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியானவரைத் தோழனாகக் கொள்ளலாம். அவர்களுடைய சேவையாலும், பரிசுத்த ஆவியானவரின் உதவியாலும் காலப்போக்கில் ஊழியக் காரர்கள் பின்பு தங்கள் இருதயங்களில் மாற்றப் படுவார்கள்.

இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசத்துடன் பிறரைப் பலப்படுத்த அவர்களும் நாமும் வாழ்நாள் முழுவதும் விசுவாசத்தில் தொடரும்போது, அந்த மாற்றம் மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படும். மனமாற்றம் ஒரு நிகழ்வு மட்டும் அல்ல,அல்லது வாழ்க்கையின் ஒரு பருவத்தில் மட்டும் தொடரக்கூடியது அல்ல, ஆனால் ஒரு தொடர் நிகழ்ச்சி ஆகும். நாம் இரட்சகரைப் பார்த்து, நாம் அவரைப்போல் ஆகியிருக்கிறோம் என்று காணும்போது, அந்தப் பரிபூரண நாள் வரைக்கும் வாழ்க்கை பிரகாசமடைய முடியும். கர்த்தர் இப்படியாக அப்பிரயாணத்தை விவரித்தார்: “தேவனுடையது ஒளியாயிருக்கிறது; அந்த ஒளியைப் பெற்று, தேவனில் தொடர்ந்து இருக்கிறவனும், அதிக ஒளியைப் பெறுகிறான்; பரிபூரணமாகும் நாள் வரைக்கும் அந்த ஒளி அதிகம் பிரகாசமாகிறது.” (கோ.உ. 50:24).

அது நம் ஒவ்வொருவருக்கும் சாத்தியமாகும் என நான் வாக்குத்தத்தம் செய்கிறேன்.

---

**இச் செய்தியிலிருந்து கற்பித்தல்**

மனமாற்றம் ஒருநாள் சம்பவம் என்பதை விட அது தொடர்கிற முறை என கற்பிக்க பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தின் மூப்பர் டேவிட் ஏ. பெட் னார் “ஊறுகாயின் உவமையை” பயன்படுத்தினார்: “வரிமேல் வரியாகவும் கொள்கை மேல் கொள்கையாகவும், மெதுவாக கிட்டத்தட்ட நாம் உணராதவகையில், நமது எண்ணங்களும், சிந்தனைகளும், வார்த்தைகளும், செயல்களும் தேவ சித்தத்தோடு இணைந்து விடுகின்றன” (“Ye Must Be Born Again,” *Liahona*, May 2007, 19). நீங்கள் கற்பிப்பவர்களுடன் ஊறுகாய் உவமையை பரிசீலனை செய்வதைக் கருத்தில் கொள்ளவும். தலைவர் ஐரிங்கும் மூப்பர் பெட்னாரும் கலந்துரையாடுகிற மெதுவான மனமாற்ற முறையை நிதானமாக முன்னெடுத்துச் செல்ல நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய முடியும்?

## இளைஞர்

### என் இதய மாற்றம்

டான்டே பைராடோ

மறுஸ்தாபிதம் செய்யப்பட்ட இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசத்தைப் பற்றி நான் முதலில் கற்றபோது, அதன் சத்தியம் பற்றி ஆவி சாட்சியளிப்பதை நான் உணர்ந்தேன். ஜெபத்தின் மூலம் எனது சாட்சி மிகவும் உறுதியானது, நான் ஞானஸ்நானம் பெற தீர்மானித்தேன்.

நான் ஞானஸ்நானம் பெற்ற உடனே, என் தொகுதி ஜனங்கள் ஊழியம் செய்வது பற்றி நான் என்ன நினைக்கிறேன் என என்னைக் கேட்கத் தொடங்கினர். உண்மையாகவே என்ன சொல்வது என எனக்குத் தெரியவில்லை. என் குடும்பத்தையும், என் படிப்பையும் விட்டு விட்டு செல்லும் எண்ணம் மோசமானதாகத் தோன்றியது.

பின்பு ஒரு நாள் என் மனமாற்றம் பற்றி சிந்திக்கத் தொடங்கினேன். எனக்குக் கற்பித்து, என் கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதிலளித்து, சுவிஷேசத்தைப் புரிந்து கொள்ள எனக்கு உதவிய ஊழியக்காரர்களை நினைத்தேன். அவர்களது உதவியின்றி நான் ஒருபோதும் உண்மையான சபையைக் கண்டுபிடித்திருக்க மாட்டேன் என நான் உணர்ந்தேன். நான் அதை உணர்ந்த உடனே, என் இருதயத்தில் ஊழியம் செய்ய வாஞ்சை துளிர் விட்டது. நான் ஒரு முழு நேர ஊழியம் செய்ய வேண்

டும் என ஆவி என்னிடம் சொல்வதை உணர முடிந்தது.

ஊழியப்பணி நமது பரலோகப்பிதாவுக்குச் செய்யும் பணி எனவும், மறுஸ்தாபிதம் செய்யப்பட்ட சுவிஷேசம் பற்றிய அற்புதமான அறிவுக்கு ஆத்துமாக்களைக் கொண்டு வர நாம் உதவ முடியும், எனவும் நான் உணர்ந்தேன்.

*எழுதியவர் போர்ட்டலேசா, பிரேசிலில் வசிக்கிறார்.*

## பிள்ளைகள்

### உங்கள் சாட்சி பிரகாசமாக எரிவதாக

ஒரு சாட்சி பெறுவது தீ மூட்டுவது போன்றதாகும். தீ எரிந்து கொண்டிருக்க நாம் விறகைப் போட்டுக் கொண்டிருக்க வேண்டியது போலவே, நமது சாட்சிகள் பிரகாசமாக எரிய, நாம் ஜெபிக்க வேண்டும், மனந்திரும்ப வேண்டும், வேதங்களைப் படிக்க வேண்டும், கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

உங்கள் சாட்சியை எப்படி வளர்ப்பது என்று அதிகமாக அறிய, கிழே பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு வசனத்தையும் வாசிக்கவும். ஐந்து பெரிய ஜுவாலைகளுடன் நெருப்பு படம் வரையவும். நீங்கள் வாசிக்கிற ஒவ்வொரு வசனத்துக்கும் ஒரு ஜுவாலையில் வண்ணம் தீட்டவும். நீங்கள் அதிக வசனம் வாசிக்க வாசிக்க, நெருப்பும் உங்கள் சாட்சியும் பிரகாசமாகும்!

மோசியா 2:17
ஆல்மா 5:46
ஆல்மா 32:27
3 நெப்பி 15:10
யோவான் 5:39

© 2015 by Intellectual Reserve, Inc. எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நாவில் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/14. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/14. *First Presidency Message, February 2015* மொழிபெயர்ப்பு. Tamil. 12582 418

# இயேசு கிறிஸ்துவின் தன்மைகள்: பாவமற்றவர்

விசுவாசம், குடும்பம், ஒத்தாசை

*இச்செய்தியை ஜெபத்துடன் படித்து, எதைப் பகிர்வது என அறிய நாடவும். இரட்சகரின் வாழ்க்கையையும் ஊழியத்தையும் புரிந்து கொள்வது, எப்படி உங்கள் விசுவாசத்தை அதிகரிக்கும், விசாரிப்புப் போதகத்தின் மூலம் நீங்கள் கண்காணிப்பவர்களை எப்படி ஆசீர்வதிக்கும்? அதிக தகவலுக்கு reliefsociety.lds.org. பார்க்கவும்.*

*இரட்சகரின் தன்மைகளை விளக்கும் விசாரிப்புப் போதகச் செய்திகளின் வரிசையில் இது ஒரு பகுதியாகும்.*

மனுக்குலத்துக்காக பாவநிவர்த்திசெய்ய திறமையுடைய ஒரே ஒருவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே. “இயேசு கிறிஸ்து, குற்றமில்லாத ஆட்டுக்குட்டி, தாமாகவே தம்மை பலிபீடத்தில் கிடத்தி, நமது பாவங்களுக்காக கிரயம் செலுத்தினார்,” என்றார் பிரதான தலைமையில் இரண்டாம் ஆலோசகரான தலைவர் டியட்டர் உக்டர்ப்.[1] இயேசு கிறிஸ்து பாவமில்லாதவர் எனப் புரிந்து கொள்வது அவரில் நமது விசுவாசத்தை அதிகரிக்கவும், அவரது கட்டளைகளைக் கைக்கொள்ள முயலவும், மனந்திரும்பவும், பரிசுத்தமாகவும் நமக்கு உதவ முடியும்.

“இயேசு மாம்சமும் ஜீவனும் உடையவராய், ஆனால் சோதனைக்கு அவர் இடங்கொடுக்கவில்லை (மோசியா 15:5 பார்க்கவும்), என்றார் பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தின் மூப்பர் டி. டாட் க்றிஸ்டோபர்சன். “அவர் புரிந்து கொள்வதால் நாம் அவரிடத்தில் திரும்பலாம். அவர் போராட்டத்தைப் புரிந்து கொள்கிறார், எப்படிப் போராட்டத்தை ஜெயிப்பது எனவும் புரிந்து கொள்கிறார்....

“...அவரது பாவநிவர்த்தியின் வல்லமை நம்மிலுள்ள பாவங்களை துடைக்க முடியும். நாம் மனந்திரும்பும்போது, அவரது பாவநிவர்த்தியின் கிருபை நம்மை நீதிமான்களாக்கி நம்மை சுத்திகரிக்கிறது (3 நெப்பி 27:16–20 பார்க்கவும்). அது நாம் இடங்கொடுக்காமலிருந்தது போலவும், சோதனைக்கு உட்படாமலிருந்தது போலவும் இருக்கிறது.

கிறிஸ்துவின் பாதையைப் பின்பற்ற ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாரமும், நாம் முயலும்போது, நமது ஆவி தன் மேன்மையை உறுதி செய்து, உட்போராட்டம் குறைகிறது, சோதனைகள் தொந்தரவு செய்வதை நிறுத்துகின்றன.”[2]

### கூடுதல் வேதங்கள்

*மத்தேயு 5:48; யோவான் 8:7; எபிரேயர் 4:15; 2 நெப்பி 2:5-6*

### வேதங்களிலிருந்து

அவரது தெய்வீக மகன் ஸ்தானம், பாவமற்ற ஜீவியம், கெத்சமனே தோட்டத்தில் அவரது பாடுகள் மற்றும் இரத்தம் சிந்துதல், சிலுவையில் அவரது மரணம், கல்லறையிலிருந்து அவரது உயிர்த்தெழுதல் மூலம் இரட்சகர் நமது பாவங்களுக்காக கிரயம் செலுத்தினார். இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தி மூலம், நாம் நமது பாவங்களிலிருந்து மனந்திரும்பும்போது, நாம் மீண்டும் சுத்தமாகிறோம்.

பென்யமீன் இராஜா இயேசுகிறிஸ்துவின் பாவநிவர்த்தி பற்றி தன் ஜனங்களுக்குப் போதித்தான், பின்பு அவர்கள் நம்புகிறார்களா என்று கேட்டான். “அவர்கள் எல்லோரும் ஏகமாய்ச் சத்தமிட்டு, சொன்னதாவது: ... பொல்லாப்பை இனி செய்ய மனமில்லாதவர்களாய் நன்மையை இனி தொடர்ந்து செய்யும்படிக்கு, எங்கள் இருதயங்களிலும், எங்களுக்குள்ளும் பலத்த மாற்றங்களை... ஆவி... செய்தது....

“தேவன் எங்களுக்கு எல்லாவற்றிலும் கட்டளையிட்டுக் கொடுக்கும் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்திருக்கவும், அவருடைய சித்தத்திற்கேற்ப நடக்கவும், அவரோடு ஒரு உடன்படிக்கையில் பிரவேசிக்க மனமுள்ளவர்களாயிருக்கிறோம்” (மோசியா 5:1-2, 5).

“பொல்லாப்பை இனி செய்ய மனமில்லாதவர்களாய், நன்மையை தொடர்ந்து செய்த” பென்யமீன் இராஜாவின் ஜனங்களைப் போல “பலத்த மாற்றத்தை” நாமும் பெறலாம்” (மோசியா 5:2).

குறிப்புகள்

1. Dieter F. Uchtdorf, “You Can Do It Now!” *Liahona*, Nov. 2013, 56.
2. D. Todd Christofferson, “That They May Be One in Us,” Liahona, Nov. 2002, 71.

D. Todd Christofferson, “That They May Be One in Us,” *Liahona*, Nov. 2002, 71.

***இதைக் கருத்தில் கொள்ளவும்***

சுத்தமாக இருப்பது, பரிபூரணமாக இருப்பதிலிருந்து எப்படி மாறுபடுகிறது?

© 2015 by Intellectual Reserve, Inc. *அனைத்து உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளது. அ.ஐ.நாட்டில் அச்சடிக்கப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/14. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/14. Visiting Teaching Message, February 2015* மொழிபெயர்ப்பு. Tamil. *12582 418*